2017 ஜூலை 11]

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகின்றேன். மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனைக்கு தாய்–சேய் நலனைப் பாதுகாக்க மேன்மைமிகு மையம்* Centre of Excellence *அமைக்க ரூ.20 கோடி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பெரியார் மருத்துவமனைக்கு* MRI Scan *அல்லது* CT Scan *வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிவித்த 108 அறிவிப்பிலே தங்களுக்கும் சிறப்பான அறிவிப்புகள் வழங்கப்பட்டன. மேலும், கூடுதல் வசதிகளும் படிப்படியாகச் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

உலர்களம்

***4250—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், அச்சங்குளம் கிராமத்தில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2017 ஜூலை 11

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், அச்சங்குளம் கிராமத்தில் உலர்களம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதயக்கனி, பாரத ரத்னா, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அகிலத்தில் அழியாப் புகழ் பெற்றவர்கள். வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் அம்மா என்னும் தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன். ‘பதவி வரும்போது பணிவும் வர வேண்டும், துணிவும் வர வேண்டும்’ என்கிற பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப, பணிவும், துணிவும் இனிதே கலந்த மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்குத் தொடர்ந்து நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், அச்சங்குளம் கிராமம் விவசாய மக்கள் நிறைந்த பகுதியாகும். இங்கு விவசாயிகள் விளைவிக்கின்ற விளைபொருட்களான நெல், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் பயறு வகைகள் ஆகியவற்றை உலர வைப்பதற்கும், சுத்தப்படுத்துவதற்கும் சாலைகளையும், தெருக்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு பயன்படுத்துவது, போக்குவரத்துக்கு இடையூறாகவும், பொதுமக்களுக்கு சிரமமாகவும் உள்ளது. இங்கு தேவையான அளவு இட வசதி இருப்பதால், விவசாயிகளின் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, உலர்களம் அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு

2017 ஜுலை 11]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் நெல், மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் 3,018 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இதன் உற்பத்தி 22,071 மெட்ரிக் டன் ஆகும். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியை உள்ளடக்கிய விருதுநகர் மாவட்டத்தில் 65 உலர்களங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, அச்சங்குளம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் 2013–2014 ஆம் ஆண்டு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், அச்சங்குளம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ள செங்குளத்தில் இதே திட்டத்தின்கீழ் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி உலர்களங்களை அச்சங்குளம் கிராம விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும், சம்பந்தப்பட்ட ஊராட்சியில் உலர்களம் உரிய இடம் ஒதுக்கீடு செய்து வழங்கும்பட்சத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதி பெற்று, விற்பனைக்கூட நிதியிலிருந்து உலர்களம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. விவசாயிகளின் துயர்துடைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் ரங்கர்கோவில் செல்லும் வரத்துக் கால்வாய்களில், விவசாயிகள் மழை நீரைச் சேமிக்கும் வகையில் தடுப்பணை அமைத்துத் தந்து உதவினால், அருகிலுள்ள 20 கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் கிடைக்கும், நிலத்தடி நீரும்*

[2017 ஜூலை 11

அதிகரிக்கும். ஆதலால், ரங்கர்கோவில் அருகே தடுப்பணை ஒன்றை அமைத்துக் கொடுத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு நீங்கள் தனிக் கேள்வி போட வேண்டும்.

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

176—

வீட்டுமனைப் பட்டா

***7818—திரு. பி. மூர்த்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு சுமார் 250 அனுமந்தப் பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி பகுதிகளில் வசிக்கும் பட்டா இல்லாத மக்களுக்கு அரசு விதிகளின்படி பட்டா வழங்க விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலம் ஊராட்சி, எல்.கே.பி. நகர்,